# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
# SIRKALI
## DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.187/2019**

| Deposition of Name | பாஸ்கரன் Rtd. SI | Prosecution | LW-6 as PW- 4 |
|---|---|---|---|
| Father Name | கோபால்சாமி | Defence | |
| Station | மூங்கில்தோட்டம் | Taluk | மயிலாடுதுறை |
| District | மயிலாடுதுறை | Age | 63/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

22.08.2025 **எதிரி ஆஜர்**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

**1.** நான் பாகசாலை காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 2023 ம் ஆண்டு பணிஓய்வு பெற்றுமேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். வழக்கு சமயத்தில் வைத்தீஸ்வரன் கோயில் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது கடந்த 19.06.2018 ம் தேதி நிலைய பொறுப்பில் இருந்த போது காலை சுமார் 6.30 மணிக்கு வைத்தீஸ்வரன் கோயில் காவல்நிலையத்தில் இருந்து புறப்பட்டு என்னுடன் சிறப்பு உதவி ஆய்வாளர் அன்பழகன் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு கோபால கிருஷ்ணன் ஆகியோருடன் 7.00 மணிக்கு ஆதமங்களம் உப்பனாற்று பாலம் அருகில் கண்காணித்து வரும்போது அங்கு வந்த டிராக்டரை நிறுத்த முற்பட்ட போது அவர் இறங்கி தப்பி ஓட முயன்றார். அவரை பிடித்து விசாரித்ததில் அவர் பெயர் ஆதமங்களத்தை சேர்ந்த இளையகுமார் த/பெ. அருள் எனவும் வண்டி எண் TN 25 AF3802 மற்றும் டிப்பர் எண் TN 51 M 7250 எனவும் டிராக்டரை சோதனை செய்து பார்க்கையில் அதில் 1 யூணிட் ஆற்று மணல் இருப்பது தெரிய வந்தது.

2. பின்பு 8.00 மணிக்கு கைப்பற்றுதல் மகசர் கைப்பற்றியும், எதிரி தடயத்துடன் 10.00 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண். 118/2018 U/s.379 IPC r/w 21 (1) கீழ் வழக்கு பதிவு செய்து நிலைய பாராவசம் ஒப்படைக்கப்பட்டது. அந்த முதல் **தகவல் அறிக்கை அசாஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே காலை 11.00 மணிக்கு சம்பவ இடத்தில் பார்வை மகசர் தயார் செய்தும் சாட்சி

வெங்டேசன் மற்றும் அறிவழகன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் தயார் செய்தேன். அந்த பார்வை மகசர் மற்றும் **மாதிரி வரைபடம் அசாஆ.3 மற்றும் 4 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. பின்பு எதிரியை குற்றவியல் நீதிமன்றம் சீர்காழிக்கு தக்க வழிக்காவலுடன் அனுப்பி வைக்கபட்டது. சாட்சிகள் அன்பழகன் கோபாலகிருஷ்ணன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து மேல் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் மகாதேவன் வசம் ஒப்படைத்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

3. வைத்தீஸ்வரன் கோயில் காவல் நிலையத்தின் நிலைய பொருப்பு அதிகாரி மகாதேவன் என்றால் சரிதான். போலிஸ் Standing order பிரிவு 195 ன் படி அவர் தான் காவல் நிலையத்தின் அதிகாரி என்றால் சரிதான். காவல் நிலைய அதிகாரி தான் மற்ற காவலர்களுக்கு பணியை பிரித்து கொடுப்பார் என்றால் சரிதான். காவல்நிலைய அதிகாரி சொல்லிதான் நாங்கள் ரோந்துக்கு போனோம் என்றால் சரிதான். போலிஸ் Standing order பிரிவு 198 ன் படி முறைக்காவல் புத்தகம் என் வசம் இருக்கும் என்றால் சரிதான். அதனை பொதுநாட்குறிப்பு புத்தகத்தில் எங்களை அனுப்பிவிட்டு உதவி ஆய்வாளர் சிடி பைலில் எழுதி விடுவார் என்றால் சரிதான்.

4. அந்த பொது நாட்குறிப்பினை நீதிமன்றத்தில் நீங்கள் தாக்கல் செய்யபட முடியுமா என்றால் அது எனக்கு தெரியாது. பொதுவாக காவல் நிலையத்தில் ரோந்து காவல் எத்தனை மணிக்கு ஆரம்பிப்பார்கள் என்றால் காலை 7 முதல் 8 மணி வரை. காவல்நிலையத்தில் ரோந்து காவல் முடிந்த பிறகு தான் நாங்கள் சம்பவ இடத்திற்கு செல்வோம் என்றால் சரியல்ல. எதிரியும் மணல் டிராக்டரும் காவல் நிலைய பொறுப்பு அதிகாரியிடம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தேன். ஒப்படைக்கும் போது மேல் அதிகாரி மகாதேவனுக்கு புகார் மனு எழுதி கொடுத்தேனா என்றால் இல்லை. மேல் அதிகாரியிடம் புகார் கொடுக்காமல் நானே புகார் எழுதி நீதிமன்றத்திற்கு அனுப்பினேன் என்றால் சரியல்ல.

5. நாங்கள் சம்பவ இடத்திற்கு கோபாலகிருஷ்ணன், அன்பழகன் மற்றும் பாஸ்கர் ஆகிய மூன்று பேர் சேர்ந்து தான் சென்றோம் என்றால் சரிதான். டிராக்டரில் 1 யூனிட் மணல் இருப்பதாக எப்படி தெரிந்து கொண்டேன் என்றால் தோராயமாக தெரிந்து கொண்டேன் அதன் பிறகு பொதுப்பணித்துறையில் சான்று கொடுத்தார்கள். 25.07.2018 அன்று தான் பொதுப்பணித்துறை செயல் பொறியாளர் அவர்களுக்கு கடிதம்அனுப்பினேன் என்றால் சரிதான். 30.07.2018 அன்று தான் டிராக்டரில் 1 யூனிட் மணல் இருந்ததாக செயர்பொறியாளர் எங்களுக்கு கடிதம் அனுப்பினார்

என்றால் சரிதான். எதிரியிடம் சம்பவ இடத்தில் ஒப்புதல் வாக்குமூலம் சாட்சிகள் முன்னிலையில் வாங்கினேனா என்றால் இல்லை. சம்பவ இடத்தின் அருகில் 4 மீட்டர் தள்ளி நிறைய வீடுகள் இருக்கிறது என்றால் சரிதான். அவர்கள் யாரையாவது விசாரித்து கைப்பற்றுதல் மகசரில் கையெழுத்து வாங்கினேனா என்றால் அவர்கள் வரமுன்வரவில்லை. அதனால் ரோந்து சென்ற இரண்டு அன்பழன் மற்றும் கோபாலகிருஷ்ணன் ஆகிய இருவரிடம் கைப்பற்றுதல் மகசரில் கையெழுத்து வாங்கினேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் புள்ளி விபர கணக்கினை காட்டுவதற்காக எதிரி மீது பொய்வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. காவல் நிலைய மேல் அதிகாரியிடம் நான் புகார் கொடுக்காமலும் நான் ரோந்து க்கு சென்ற 3 போலிசாரும் எதிரி மீது பொய்வழக்கு போட்டு விட்டோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் புள்ளி விபர கணக்கினை காட்டுவதற்காக எதிரி மீது பொய்வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளபட்டது**

**மறுவிசாரணை இல்லை.**